ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2241/5 - 2021 අගෝස්තු මස 16 වැනි සඳුදා - 2021.08.16
*2241/5 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆந் திகதி திங்கட்கிழமை*
*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**2011 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கமுடைய ஊவா மாகாணத்தில் தாபிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் நிர்வாகத்தைக் கண்காணிப்பதற்கான நியதிச் சட்டத்தின் 2(3)(ஆ) ஆம் பிரிவின் பிரகாரம் செய்யப்படும் அறிவித்தல்**

*2011 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கமுடைய ஊவா மாகாணத்தில் தாபிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் நிர்வாகத்தைக் கண்காணிப்பதற்கான நியதிச் சட்டத்தின் 2(2) ஆம் பிரிவின் மூலம் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் அந்நியதிச் சட்டத்தின் 2(1) என்ற உபபிரிவின் (ஆ) மற்றும் (இ) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு விடயம் கந்தகெடிய பிரதேச சபையின் தவிசாளரினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பது தொடர்பாக விசாரணை செய்து எனக்கு அறிவிப்பதற்காக நீதிமன்ற நீதவான் எச். எம். ஆர். அனுரகுமார அவர்கள் நியமிக்கப்பட்டதுடன், அவ்விசாரனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைக் கவனத்தில் கொண்டு 2011 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கமுடைய ஊவா மாகாணத்தில் தாபிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் நிர்வாகத்தைக் கண்காணிப்பதற்கான நியதிச் சட்டத்தின் 2(3)(அ) ஆம் பிரிவின் கீழ் கந்தகெடிய பிரதேச சபையின் தவிசாளர் தொடர்பில் என்னால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 2217/ 45 மற்றும் 05.03.2021 ஆந் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட அறிவித்தலை அந்நியதிச் சட்டத்தின் 2(3)(ஆ) ஆம் பிரிவின் பிரகாரம் 16.08.2021 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் இரத்துச் செய்கிறேன்.*

**ஏ. ஜே. எம். முஸம்மில்,**
*ஊவா மாகாண ஆளுநர்.*

*ஊவா மாகாண ஆளுநர் அலுவலகம்,*
*2021, ஓகத்து 16.*

*08-443*

1A - PG 5530 — 25 (2021/08) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*